செ.வெ.எண்: 537 நாள்: 24.09.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 28.09.2021 அன்று**

**காணொலிக்காட்சி வாயிலாக நடைபெற உள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 28.09.2021 செவ்வாய்க்கிழமை அன்று காலை 11 மணியளவில் காணொலிக்காட்சி மூலம் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் Zoom App / Google Meet -ல் நடைபெற உள்ளது. புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் காணொலிக்காட்சி வாயிலாக கலந்துக்கொள்ளும் வண்ணம் அனைத்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களிலும் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் அந்தந்த வட்டாரங்களில் உள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களை தொடர்பு கொண்டு காணொலிக்காட்சி மூலம் முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளிவிட்டு இக்கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளை மட்டும் தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**